முக்கிய வார்த்தைகள்:
திருமணம்
சவால்கள்
வணக்கம் /
அடிமைத்தனம்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**09 மே 2025 / 11 துல்கஃதா ஹிஜிரி 1446**

# இஸ்லாத்தில் திருமண அமைப்பு

ٱلْحَمْدُ لِلَّهِ عَلَى إِحْسَانِهِ، وَٱلشُّكْرُ لَهُ عَلَى تَوْفِيقِهِ وَٱمْتِنَانِهِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ تَعْظِيمًا لِشَأْنِهِ، وَأَشْهَدُ أَنَّ نَبِيَّنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ ٱلدَّاعِي إِلَىٰ رِضْوَانِهِ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ وَإِخْوَانِهِ.أَمَّا بَعْدُ، قَالَ تَعَالَى: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

இப்புனிதமிக்க தினத்தில், தொடர்ந்து நாம் அல்லாஹ்வின் மீதான ”தக்வா” [பக்தியுடன்] இருப்பதற்கு அருள் புரிய வேண்டுமென அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! நாமும் நமது குடும்பத்தார்களும் அல்லாஹ்வின் திருப்தியை அடையும் வரை, தொடர்ந்து அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றி வருவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது ஈமானிய சகோதரர்களே!**

இன்றைய ”குத்பா” பிரசங்கம், இஸ்லாமிய நோக்கில் திருமணம் எனும் தலைப்பில் கருத்துக்களை எடுத்துரைக்க இருக்கின்றது. பொதுவாக, நாம் திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது, காதி எனப்படும் திருமணச் சடங்கை நடத்தி வைப்பவர், திருக்குர்ஆனின் ”அர்-ரூம்” எனும்

அத்தியாயத்தின் பின்வரும் 21-வது வசனத்தில் காணப்படும் அல்லாஹ்வின் வார்த்தைகளை ஓதுவார்:

وَمِنْ ءَايَٰتِهِۦٓ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَٰجًا لِّتَسْكُنُوٓا۟ إِلَيْهَا
وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً ۚ إِنَّ فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ﴿٢١﴾

பொருள்: "இன்னும், நீங்கள் ஆறுதல் பெறுதற்குரிய [அதாவது, சகீனா பெறுதற்குரிய] [உங்கள்] மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக [அல்லாஹ்வாகிய] அவன் படைத்திருப்பதும், உங்களிடையே "மவத்தா" எனப்படும் அன்பையும், "ரஹ்மத்" எனப்படும் கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் [பல] அத்தாட்சிகள் உள்ளன"

**அன்பிற்குரிய எனது சகோதரர்களே!**

தற்போது ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனமாகிறது, இஸ்லாமிய நோக்கில் ஒவ்வொரு திருமணமும் மூன்று முக்கிய அம்சங்களைப் பெற்றிருப்பது அவசியமாகும் என நமக்கு நினைவூட்டுகிறது. முதலாவது பண்பு "சகீனா" என்பதாகும். அதன் பொருள்: அமைதி, சாந்தி என்பதாகும். இரண்டாவது பண்பு "மவத்தா" என்பதாகும், அதன் பொருள்: குடும்ப வாழ்க்கையில் தம்பதிகளைச் சிறப்பாகச் செயல்படுமாறுத் தூண்டும் அன்பாகும். மூன்றாவது பண்பு, "ரஹ்மத்" என்பதாகும். அதன் பொருள்: தம்பதிகளுக்கு மத்தியில் ஏற்பட வேண்டிய கிருபையும் கருணைச் சிந்தனையுமாகும்.

விஷயம் இவ்வாறிருந்தாலும், திருமண வாழ்க்கையானது, சவால்கள் மற்றும் கஷ்டங்களால் சூழ்ந்துள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம். சிலவேளை, இச்சவால்களானது தம்பதிகளுக்கு மத்தியில் பயனுள்ள பேச்சு வார்த்தைகள் இல்லாததன் காரணமாக ஏற்படலாம். உதாரணமாக, தம்பதிகளில் ஒருவர், தனது விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் மற்றொருவர் மீதான அதிருப்தியையும் வெளிப்படுத்த முடியாத நிலையில்

இருக்கலாம்; அதன் காரணமாக, அவற்றுக்குத் தீர்வுகளைக் காண அவர் முயற்சிக்கலாம். அம்முயற்சி உறவுமுறை முறிவதற்குக் காரணமாகி விடலாம்.

மேலும், தற்காலத்தில், பெரும்பாலான குடும்பங்களில், தமது குடும்பத்தார்களுக்கு உதவுவதற்காக தம்பதிகளில் ஒவ்வொருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள். எனவே, வீட்டுக்கு வெளியிலும், தொழில் செய்யும் இடங்களிலும், சமுதாய வாழ்விலும் ஏற்படும் போராட்டங்களின் காரணமாக, வாழ்க்கைத் துணையிடம், அவரை அறியாமலேயே மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில், பெற்றோர்களாக உள்ள தம்பதிகள், தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதன் காரணமாகவும் மன அழுத்தங்கள் அவர்களுக்கு ஏற்படலாம். அவ்வாறே, மாமனார், மாமியார்களுடனான உறவுகளைக் கையாளும் போதும் தடைகள், தடங்கல்கள் ஏற்படலாம். இப்பிரச்சனைகளெல்லாம் கணவன், மனைவிக்கு மத்தியிலான உறவில் பாதிப்பையும் விரிசலையும் ஏற்படுத்தலாம்.

அதே சமயம், தற்போது கூறப்பட்ட உதாரணங்களெல்லாம், குடும்ப வாழ்க்கை என்பது கடும் சுமையானது, கஷ்டமானது என நம்மை நினைக்கத் தூண்டும். அன்பிற்குரிய சகோதரர்களே! இங்குதான், நாம் திருமணத்தைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. அந்தப் புரிந்துணர்வானது, புயல் சூழ்ந்துள்ள ஆழ் கடலில் செல்லும் குடும்பம் எனும் கப்பலுக்கு வழிகாட்டுவதாக இருக்கும்.

**திருமணத்தைப் பற்றிய முதல் புரிதல்: திருமணம் என்பது ஒரு வணக்க, வழிபாட்டுச் செயல் என நாம் அறிய வேண்டும்.**

திருமண வாழ்க்கை, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பதற்காக, நேரம், சக்தி, உணர்வு, செல்வம் ஆகியவற்றைச் செலவு செய்வதன் மூலம் பலவித முயற்சிகளையும் அர்ப்பணிப்புகளையும் நாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். எனினும், திருமணம் என்பது அல்லாஹ்வுக்குச் செய்யப்படும் ஒரு வணக்க, வழிபாட்டுச் செயலாகும்;

அல்லாஹ்வுக்குக் காட்டப்படும் அடிமைத்தனமாகும் என நாம் புரிந்து கொண்டால், இம்முயற்சி உண்மையில் நமக்குப் பயனளிப்பதாக இருக்கும். அன்பிற்குரிய சகோதரர்களே அறிந்து கொள்ளுங்கள்! திருமணம் என்பது நமது வாழ்க்கையில் நாம் நீண்ட காலம் நிறைவேற்றும் வணக்க, வழிபாட்டுச் செயல்களில் ஒன்றாகும். திருமணத்துக்காகவும் குடும்ப வாழ்க்கைக்காகவும் நாம் செலவழிக்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதும், தியாகமும் ஆக்கப் பூர்வமான முயற்சியும் அல்லாஹ்வுக்குச் செய்யப்படும் வணக்க, வழிபாட்டுச் செயல்களாகும் எனக் கருதி நாம் செய்தால், அவை அப்படியே அமைந்து விடும். அல்லாஹ்வுக்கு நமது அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் செயல்களாகவும் அமைந்து விடும்.

எனவே, பெற்றோர்களாக இருக்கக்கூடிய நாம், நமது வாழ்க்கையின் மற்றொரு துணையுடன் கருணைச் சிந்தனையுடனும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும். நம்முடன் உள்ள வாழ்க்கைத் துணைவி அல்லது வாழ்க்கைத் துணைவர் திருமணம் எனும் வணக்க வழிபாட்டுச் செயலை இணைந்து நிறைவேற்றுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். நமது வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவர், இத்தற்கால உலகில் நமக்கு ஆறுதல் அளிப்பவராகவும் தோழராகவும் இருக்கின்றார்.

கோபமும் ஏமாற்றமும் ஏற்படும் காலங்களில், தம்பதியர் இருவரும், தாம் இணைந்து இன்பமாக வாழ்ந்த காலத்தை நினைவில் கொள்ள வேண்டும். நமது வாழ்க்கைத் துணையிடம் பலஹீனம் இருப்பதை நாம் அறிந்தால், அந்த பலஹீனம் நமது வாழ்க்கைக்கும் நமது உணர்வுகளின் நலனுக்கும் ஆபத்தாக இல்லாத பட்சத்தில், அதனை மறந்து, அவர்கள் செய்த நன்மைகளை நினைவில் கொள்ள வேண்டும். இதுதான், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களால் ஆர்வமூட்டப்பட்டுள்ள கொள்கையாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

لَا يَفْرَكْ مُؤمِنٌ مُؤْمِنَةً إِنْ سَخِطَ مِنْهَا خُلُقًا رَضِيَ مِنْهَا آخَرَ

பொருள்: ”ஓரிறை நம்பிக்கையாளராக உள்ள ஒரு ஆண், ஓரிறை நம்பிக்கையாளராக உள்ள பெண்ணை வெறுக்க வேண்டாம்; காரணம், அவளது ஒரு பண்பு உங்களுக்கு வெறுப்பைத் தந்தால், மற்றொரு பண்பு உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும்” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

**திருமணத்தைப் பற்றிய இரண்டாவது புரிதல்: திருமணம் என்பது, அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள எல்லைகளுக்குட்பட்டு, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையில், மனிதத் தேவைகளையும், ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.**

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் வகையிலான உறவின் மூலம் தம்பதிகளுக்கு மத்தியில் ”மவத்தத்” எனப்படும் அன்பும் பாசமும் ஆழமாக ஏற்படுகிறது. அதன் காரணமாக, கணவன், மனைவிக்கு மத்தியிலான உறவு உறுதியாகிறது. பெரும்பாலும், உடல் ரீதியிலான மற்றும் உணர்வு ரீதியிலான தேவைகள் நிறைவேறாத போது, குடும்ப வாழ்க்கையில் நம்பிக்கைத் துரோகம் செய்யும் நிலை ஏற்படுகிறது.

திறந்த சமூக சூழலில் இருக்கும் தம்பதிகளில் ஒவ்வொருவரும், மஹ்ரமல்லாதவர்களுடன் [அதாவது திருமணம் செய்து கொள்வதற்குத் தடையில்லாதவர்களுடன்] தொடர்பு கொள்ளும் போது இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள எல்லைக்குட்பட்டு இருப்பது அவசியமாகும். WhatsApp, Instagram ஆகியவற்றின் மூலம் தொடர்பு கொள்ளும் போதும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும். மறுபுறம், இந்த எல்லைகளை நாம் மீறினால் அல்லாஹ்வின் கோபம் நம்மீது ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும், அன்பிற்குரிய சகோதரர்களே! நினைவில் கொள்ளுங்கள், அன்பு கொள்ளும் பண்பானது, தம்பதிகளில் ஒவ்வொருரிடமும் காணப்படுவது அவசியமாகும். ஒவ்வொருவரும் மற்றவர் மீது அன்பு கொள்ள வேண்டும்.

வேலைப் பளுக்களும், நண்பர்களும், குழந்தை வளர்ப்பும் தம்பதிகள் தமக்குள் தரமான நேரத்தைச் செலவழிப்பதற்குத் தடையாக இருப்பது கூடாது.

**அன்பிற்குரிய ஓரிறை நம்பிக்கையின் சகோதரர்களே!**

சகீனா, மவத்தா மற்றும் ரஹ்மா ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நமது திருமணங்களையும் குடும்ப உறவுகளையும் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து முயற்சிப்போமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நம்மைக் கொண்டும் நமது திருமணங்களைக் கொண்டும் திருப்தி கொள்வானாக! அவற்றை நமது இம்மை, மறுமை வாழ்க்கையின் மகிழ்ச்சிக்குக் காரணமாக ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا ٱلْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.